ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

அதி விசேஷமானது

අංක 2202/17 - 2020 නොවැම්බර් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.11.19

*2202/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம்*

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நாமல் ராஜபக்ஷ** (பா. உ.),
இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2020, நவெம்பர் 05.

கட்டளை

*2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 2173/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் வாயிலாக திருத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க, தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள் கீழ்வருமாறு 2020 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் அமுலில் இருக்கும் வகையில் இவ்வண்ணம் திருத்தம் செய்யப்படுகின்றது :-*

*01. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் III ஆவது உப பிரிவில் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் அமைப்பு விதிகளுக்கு ஏற்புடைய ஏற்பாடுகளின் கீழ் (அ) பந்தியில் மே மாதம் முப்பத்தோராம் திகதி எனும் பதத்தினை நீக்கி நவெம்பர் மாதம் முப்பதாம் திகதி எனும் பதத்தினைப் பிரதியிடுவதனால் :*

1A - G 33185 — 25 (2020/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*02. 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் III ஆம் உப பிரிவின் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/ சம்மேளனங்களின் அமைப்பு விதிகளுக்கு ஏற்புடைய ஏற்பாடுகளின் கீழ் (அ) பந்தியானது செல்லுபடியுடையதாக ஆகப்பெறும்.*

*03. 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 2173/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இவ்வண்ணம் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*11-378*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.